ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 5.6 – கைம்மானம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.6 – கைம்மானம்

‡ கைம் மான மழ களிற்றைக் ⋆
கடல் கிடந்த கரு மணியை ⋆
மைம் மான மரதகத்தை ⋆
மறை உரைத்த திருமாலை ⋆
எம்மானை எனக்கென்றும் இனியானைப் ⋆
பனி காத்த அம்மானை ⋆
யான் கண்டது ⋆
அணி நீர்த் தென் அரங்கத்தே ‖ **5.6.1** ‖

‡ பேரானைக் ⋆
குறுங்குடி எம் பெருமானை ⋆
திருத்தண்கால் ஊரானைக் ⋆
கரம்பனூர் உத்தமனை ⋆
முத்திலங்கு கார் ஆர் திண் கடல் ஏழும் ⋆
மலை ஏழ் இவ் உலகேழ் உண்டும் ⋆
ஆராதென்றிருந்தானைக் ⋆
கண்டது தென் அரங்கத்தே ‖ **5.6.2** ‖

ஏன் ஆகி உலகிடந்து ⋆
அன்றிரு நிலனும் பெரு விசும்பும் ⋆
தான் ஆய பெருமானைத் ⋆
தன் அடியார் மனத்தென்றும் ⋆
தேன் ஆகி அமுதாகித் திகழ்ந்தானை ⋆

மகிழ்ந்தொருகால் ⋆
ஆன் ஆயன் ஆனானைக் ⋆
கண்டது தென் அரங்கத்தே ‖ **5.6.3** ‖

வளர்ந்தவனைத் தடங்கடலுள் ⋆
வலி உருவில் திரி சகடம் ⋆
தளர்ந்துதிர உதைத்தவனைத் ⋆
தரியாதன்றிரணியனைப் பிளந்தவனை ⋆
பெரு நிலம் ஈர் அடி நீட்டிப் ⋆
பண்டொரு நாள் அளந்தவனை ⋆
யான் கண்டது ⋆
அணி நீர்த் தென் அரங்கத்தே ‖ **5.6.4** ‖

நீர் அழலாய் நெடு நிலனாய் ⋆
நின்றானை ⋆
அன்றரக்கன் ஊர் அழலால் உண்டானைக் ⋆
கண்டார் பின் காணாமே ⋆
பேர் அழலாய்ப் பெரு விசும்பாய்ப் ⋆
பின் மறையோர் மந்திரத்தின் ⋆
ஆர் அழலால் உண்டானைக் ⋆
கண்டது தென் அரங்கத்தே ‖ **5.6.5** ‖

தம் சினத்தைத் தவிர்த்தடைந்தார் ⋆
தவ நெறியை ⋆
தரியாது கஞ்சனைக் கொன்று ⋆
அன்றுலகம் உண்டுமிழ்ந்த கற்பகத்தை ⋆
வெம் சினத்த கொடுந் தொழிலோன் ⋆
விசை உருவை அசைவித்த ⋆

அம் சிறைப் புட் பாகனை ⋆
யான் கண்டது தென் அரங்கத்தே ॥ **5.6.6** ॥

‡ சிந்தனையைத் தவநெறியைத் ⋆
திருமாலை ⋆
பிரியாது வந்தெனது மனத்திருந்த ⋆
வடமலையை ⋆
வரி வண்டார் கொந்தணைந்த பொழிற் கோவல் ⋆
உலகளப்பான் அடி நிமிர்த்த அந்தணனை ⋆
யான் கண்டது ⋆
அணி நீர்த் தென் அரங்கத்தே ॥ **5.6.7** ॥

துவரித்த உடையவர்க்கும் ⋆
தூய்மை இல்லாச் சமணர்க்கும் ⋆
அவர்கட்கங்கருள் இல்லா ⋆
அருளானை ⋆
தன் அடைந்த எமர்கட்கும் அடியேற்கும் ⋆
எம்மாற்கும் எம் அனைக்கும் ⋆
அமரர்க்கும் பிரானாரைக் ⋆
கண்டது தென் அரங்கத்தே ॥ **5.6.8** ॥

பொய் வண்ணம் மனத்தகற்றிப் ⋆
புலன் ஐந்தும் செல வைத்து ⋆
மெய் வண்ணம் நினைந்தவர்க்கு ⋆
மெய்ந் நின்ற வித்தகனை ⋆
மை வண்ணம் கரு முகில் போல் ⋆
திகழ் வண்ண மரதகத்தின் ⋆

அவ்வண்ண வண்ணனை ⋆
யான் கண்டது தென் அரங்கத்தே ॥ **5.6.9** ॥

‡ ஆ மருவி நிரை மேய்த்த ⋆
அணி அரங்கத்தம்மானை ⋆
காமரு சீர்க் கலிகன்றி ⋆
ஒலி செய்த மலி புகழ் சேர் ⋆
நா மருவு தமிழ் மாலை ⋆
நால் இரண்டோடிரண்டினையும் ⋆
தாமருவி வல்லார் மேல் ⋆
சாரா தீவினை தாமே ॥ **5.6.10** ॥

அடிவரவு — கைம்மானம் பேரானை ஏனாகி வளர்ந்தவனை நீர் தம் சிந்தனை துவரித்த பொய் ஆமருவி பண்டை

கைம்மானம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்